# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 10.11.2020**

**முன்னிலை**

**திரு. ச.த. தமிழ்குமார், B.A., B.L.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**வழக்கு எண். NC1409/F/2019 (SA7068/F/2018)**

திரு. S. திவாகரன் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்ப் பொறியாளர் ,
இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
திட்டக்குடி, கடலூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| **மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள்** | 09.06.2018 |
| **முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1)** | 27.07.2018 |
| **மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3)** | 20.09.2018 |
| **ஆணையத்தின் ஆணை நாள்** | 12.06.2019 |
| **ஆணை பெறப்படாத மனு நாள்** | 25.06.2019 |

******

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 12.06.2019 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை 7 தினங்களுக்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு. S. திவாகரன், கடலூர் மாவட்டம் அவர்கள் ஆஜரானார். பொது

அதிகார அமைப்பின் சார்பாக திரு சிவகுரு, பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், இயக்குதலும் மற்றும் பராமரித்தலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், திட்டக்குடி, கடலூர் மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 09.06.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 10.09.2014 ல் தனது தந்தை திரு.சாமுண்டி அவர்களுடன் சேர்ந்து எழுதி கிரையம் கொடுத்த நிலம் - T நெய்வாசல் கிராம எல்லையில் புல எண்.41/11-0.390 ஏர்சில் 0.04.0 ஏர்ஸ் (0.10 சென்ட்) நிலம் கிரையம் ஆவினங்குடி கிராமத்தில் வசிக்கும் திரு.ராஜன் மகன் திரு.ரவி என்பவருக்கு கொடுத்ததாகவும், தற்சமயம் ராஜன் மகன் ரவிக்கு கொடுத்த மின் சர்வீஸ் இணைப்பு எண்,164-ல் மின் இணைப்பு பெற அவர் கொடுத்த பத்திரம் மற்றும் இதர ஆவணங்களின் நகல்கள் வழங்குமாறு கேட்டு பொது நல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் பகிர்மான உற்பத்திக் கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் எந்தவிதமான தகவலும் அளிக்கவில்லை என தெரிவித்து தான் கோரிய தகவல்களுக்கும், தனது 9.6.2018 தேதியிட்ட மனுவிற்கு உரிய பதில் வழங்க நடவடிக்கை எடுக்கவும், கேட்டு, 27.07.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் 23.08.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்குத் தகவல் வழங்கியுள்ளார். மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் முழுமையாக வழங்கவில்லை என தெரிவித்தும், தனக்கு உரிய தகவல் கிடைத்திட ஆவண செய்திட கேட்டும், பிரிவு 19(3)ன் கீழ் 20.09.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 12.06.2019 அன்று விசாரணை மேற்கொண்டு **SA7068/F/2018** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 25.06.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர், முழுமையான உரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெறப்பட்டதாகவும் இக்கோப்பினை முற்றாக்கலாம் என தொலைபேசி விசாரணையில் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரும் தகவல்கள் வழங்கியதாக ஒப்புகொண்டதன் பேரில், ஆணையம் இதனை பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை செய்ய முகாந்திரம் இல்லையென கருதி இக்கோப்பை முற்றாக்கப்படுகிறது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். NC1409/F/2019 (SA7068/F/2018)**

பொது அதிகார அமைப்பு

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர் மற்றும்**

செயற்பொறியாளர் ,
இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
திட்டக்குடி, கடலூர் மாவட்டம்.

**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**

திரு. S. திவாகரன்,
த/பெ. சாமுண்டி,
T நெய்வாசல் கிராமம்,
திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம் - 606 111.

Copy to: Judgement File / Spare
JE/PA - 19.11.2020